DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE  NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 358/2024 |
| Deposition of Witness for | PW 1 |
| Name | கண்ணுச்சாமி |
| Father / Husband Name | கருப்பணத்தேவர் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 23th June 2026.

---

**(எதிரி ஆஜர். புகார்தாரர் ஆஜர்.)**

**எதிர்மனுதாரர் மனுவின் பேரில் குறுக்கு விசாரணை :-**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் SSLC படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் காவல் ஆய்வாளராக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் மற்றும் புகாரில் என்ன எழுதி உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். நான் சொன்ன தகவலின் படி தான் எதிரிக்கு வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்ற விபரம் பிரமாண வாக்குமூலம் மற்றும் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி என்னிடம் எப்போது பணம் பெற்றார் என்ற விபரத்தை பிரமாண வாக்குமூலம் மற்றும் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரியை எப்படி தெரியும் என்றும், எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை பிரமாண வாக்குமூலம் மற்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல தற்போது வழக்கிற்காக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எதிரிக்கு பணம் கொடுத்த போது தனியாக பேப்பரில் எழுதிக்கொடுத்துள்ளார். எதிரி அவ்வாறு கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த சமயத்திலே தாக்கல் செய்திருப்பேன் தற்சமயம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணம் என்னிடம் தான் உள்ளது. தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

BALSAMY VAISHNAVI

Digitally signed by BALSAMY VAISHNAVI
Date: 2026.06.23 17:48:08 +0530

நீதித்துறை நடுவர் எண். 1(மு.கூ.பொ),
**சிவகங்கை.**